


- வாழ்வோம்

வலையோசை

சோஷியல் மீடியாவில் சுற்றி வரும் சுவாரஸ்யங்கள்... உங்களுக்காக!

Saraswathi Ilango

2022-ல இருந்து RSS பேரணிகளை நீதிமன்றம் வரைக்கும் போய் successfulஆ எதிர்த்தது தி.மு.க. அரசு!

ஆனா இப்போ? தமிழ்நாட்டுல 128 இடங்கள்ல பேரணி நடத்த உயர் நீதிமன்றம் அனுமதி கொடுத்திருக்கு!

நீதிமன்றத்துல த.வெ.க. அரசு சும்மா பேச்சுக்கு உப்புச் சப்பில்லாத reasonஸை வேணும்னே சொல்லி சமாளிக்கப் பார்த்தா, இப்படித்தான் ஆகும்!

Soft launch of Hindutvaல இருந்து இப்போ Hard launch of Hindutva வுக்கே வந்துட்டாங்க!

கேட்டா, கொள்கை எதிரி பா.ஜ.க.ன்னு கதை விடுவாங்க!

Alien

ஆட்சிக்கு வந்த ஜோரில், தமிழ்நாடு முழுக்க போதைப்பொருள் ஒழிப்புக்கு 65 யூனிட்டுகள் அமைக்கப்பட்டதாகச் சொன்னார்களே? அவை என்ன செய்துகொண்டிருந்தன? சிங்கப்பெண் படை போலத்தான் அதுவும் ரீல்ஸுக்காகவா?

சிலுவை

மொத்த த.வெ.க. கூட்டமும் RTIல Fact unit பத்தி பதில் சொல்லலன்னு கேட்டதுக்கு, மொத்த கூட்டமும் ஒண்ணு சேர்ந்து ரியாக்ட் பன்றானுங்க. ஏதோ, பெருசா பதவியை தப்பா துஷ்பிரோயகம் பண்ணி இருக்கானுங்க போல. சொல்லி வச்ச மாறி Toolkit இறக்குறானுங்க.

Facebook

Aadhavan Dheetchanya

தனது நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, தமிழ்நாட்டில் 128 இடங்களில் பேரணி நடத்திக்கொள்ள ஆர்.எஸ்.எஸ்ஸுக்கு அனுமதியளித்துள்ளது, சென்னை உயர் நீதிமன்றம். இனிவரும் காலத்தில், இப்படி அனுமதி கேட்டு நீதிமன்றத்தை அணுகும் நிலையை உருவாக்க வேண்டாம் என்று காவல் துறைக்கு அறிவுறுத்தியிருப்பதன் மூலம் எதிர்கால பேரணிகளுக்கும் இப்போதே எல்லையற்ற அனுமதி கிடைத்துவிட்டது போல ஆர்.எஸ்.எஸ். தரப்பு ஆரவாரம் செய்கிறது.

தனது எந்தவொரு செயலிலும் இந்துப் பெரும்பான்மைவாதத்தையும் சிறுபான்மையினர் மீதான வெறுப்பையும் கக்குகிற இந்த நாசகார அமைப்பின் வரலாறு, நீதிமன்றங்கள் அறியாததா? வேறுவழியின்றி நீதிமன்றங்களில் சட்டத்தின் மொழியில் பேசும் அந்த அமைப்பு, நாட்டின் எந்த சட்ட விதிமுறைகளுக்கும் கட்டுப்படாதது என்பதே அதன் நூற்றாண்டுக்கால வரலாறு. ஆனால், இதையெல்லாம் கவனத்தில் கொண்டுதான் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறதா? என்று கவலையாயிருக்கிறது.

"மதச்சார்பற்ற" என்ற அலங்காரச் சொல்லை கூச்சமின்றி பயன்படுத்திக் கொள்ளும் த.வெ.க. அரசின் காவல் துறை அனுமதி அளிப்பதாக நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டிருக்கிறது. கூட்டணி/ ஆதரவுக் கட்சிகள் என்ன நிலைப்பாட்டை எடுக்கப்போகின்றன?

Elan

அரிசி விலை உயர்வுக்கு உணவுத் துறை அமைச்சர் வெங்கட்ரமணன் ஒரு விளக்கம் கொடுத்துள்ளார். இதெல்லாம் தஞ்சாவூர் கல்வெட்டில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது. வருங்கால தலைமுறைக்கு இப்படி ஒரு தற்குறி அமைச்சராக இருந்தது, தெரிந்துகொள்ள வசதியாக இருக்கும்.

கோவையின் அடையாளமாகிறது, பெரியார் அறிவுலகம்!



கோவையில்,' திராவிட மாடல்' அரசால் கட்டி எழுப்பப் பட்ட 'பெரியார் அறிவுலகம்', அம்மண்ணின் தனிப்பெரும் அடையாளமாக உருவெடுத்து வருகிறது. தினமும் நூற்றுக் கணக்கானோர் பெரியார் அறிவுலகத்திற்குச் சென்று புகைப்படங்கள் எடுத்து, அவற்றை சமூக வலை தளங்களில் பதிவிட்டுவருவ துடன், இந்தப் பிரம்மாண்ட கட்டமைப்பைக் கொடுத்த திராவிட மாடல் நாயகருக்கு நன்றி தெரிவித்து வருகின் றனர்.

'நான் பார்த்த வரையில்.. தமிழ்நாட்டின் அழகான கட்டடம், கோவை பெரியார் அறிவு மையமாகவே இருக்கும். சென்னை அண்ணா நூலகம், மதுரை கலைஞர் நூலகம், இவை இரண்டையும்விட பிரமாதமான வடிவமைப்பு. இந்தியாவில் எந்த மாநிலத்தி லும் பாஜக., காங்கிரஸ்காரர்கள் இப்படி ஒரு நூலகத்தைச் சிந்தித்தே பார்த்தது இல்லை' எனப் பதிவிட்டுள்ளார், எழுத்தாளர் பாலசுப்பிரமணியன் பொன்ராஜ்.

'வரலாறு குறித்துக்கொண்டிருக்கிறது. அன்று வள்ளுவர்கோட்டம் - கலைஞர். இன்று பெரியார் அறிவுலகம் - மு.க.ஸ்டாலின். இரண்டும் தமிழர்களின் பெருமிதம் என்பது தற்செயலானதல்ல' எனப் பதிவிட்டுள்ளார், எழுத்தாளர் நாகு அன்பழகன்.

"யாரும் எதிர்பார்க்காத அளவில், எட்டு மாடி உயரத்தில் பிரம்மாண்டமாக கோவையின் மையப்பகுதியில் கட்டப் பட்டுள்ளது, பெரியார் அறிவுலகம். இது மேற்கு மண்டலத்தில் உள்ள மாணவர்களுக்குப் பெரிய பொக்கிஷமாக அமையும். அரசுத் தேர்வுகளுக்குத் தயாராகுவதற்கான எல்லா ஏற்பாடும் இதில் உள்ளது.

கோவையில் தி.மு.க.வின் பெரும் அடையாளமாக பெரியார் அறிவுலகம் திகழும். இதை சாத்தியப்படுத்திய தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் மற்றும் அவர்களது அமைச்சரவையை கோவை மக்கள் எப்போதும் நினைவில் கொள்வார்கள்" என்று பதிவிட்டுள்ளார், கரீம் என்பவர்.

ஃப்ளாஷ்பேக்



மகள் மணவிழாவுக்குத் தலைவரிடம் வாழ்த்து!



த.ஆறுமுகம்

2015-ஆம் ஆண்டில், என் மூத்த மகள் ஆ.சுபாசினி - ஜி.விவேகானந்தன் ஆகியோ ரின் திருமண அழைப்பிதழை முத்தமிழறிஞர் கலைஞரிடம் வழங்கி வாழ்த்துப் பெற நானும் எனது துணைவியார் ஆ.இராஜலட்சுமியும் கேட்டுக்கொண்டோம். 1992-இல் நடைபெற்ற எங்களது திருமணத்திற்குத் தலைவர் வாழ்த்துக் கடிதம் அனுப்பியதை நினைவுபடுத்தியதுடன், என் இரண்டாவது மகள் மற்றும் பேரன் பேத்திகளுக்கும் தாங்களே வாழ்த்து தெரிவிக்க வேண்டும் என்ற ஆசையைத் தெரிவித்தோம். தலைவர் அதை ரசித்து மகிழ்ந்தார். அன்று, கழகப் பொரு ளாளர் அண்ணன் டி.ஆர்.பாலு, கலைஞரின் உதவியாளர் அண்ணன் சண்முகநாதன் ஆகியோர் உடனிருந்தனர். தலைவருடனான அந்தப் பசுமை யான நினைவுகள் என்றும் அகலாது.

- த.ஆறுமுகம், 44-வது வட்டச் செயலாளர். பெரம்பூர், ஊழியர் முன்னேற்றச் சங்கப் பொதுச்செயலாளர், (தொ.மு.ச) மாநகர் போக்குவரத்துக் கழகம்.

இதுபோன்ற தரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். தலைப்பில் என்ன தலையம், அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, தண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018 வாட்ஸ்அப் என்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com



தெரிந்து கொள்வோம்

1952

தூத்துக்குடி சதி வழக்கு!

ஆம் ஆண்டு செப்டம்பர் 12 ஆம் தேதி, தூத்துக்குடி இரயில் மறியல் போராட்டத்தில் கலந்துகொண்ட கே.வி.கே. சாமி உள்ளிட்ட கழகத் தோழர்கள் 68 பேர் மீது, இரயிலை நிறுத்தியது - தடுத்தது என தேசத்துரோக சதி வழக்கு போடப்பட்டது. நெல்லை மாவட்ட நீதிமன்றத்தில், இரு தரப்பு வழக்கறிஞர்களும் 39 நாட்கள் தொடர் வாதம் செய்தனர். சிலருக்கு இரண்டு ஆண்டுகள் வரை தண்டனை விதிக்கப்பட்டது. இந்த வழக்கிற்காக அன்றைய மதிப்பில் 25 ஆயிரத்துக்கு மேல் செலவு செய்தது கழகம். தண்டிக்கப்பட்ட தோழர்கள், நீண்ட சட்டப் போராட்டத்துக்குப் பின்னர், உயர் நீதிமன்றத்தால் 1954 ஆம் ஆண்டு நவம்பரில் விடுதலை செய்யப்பட்டனர்.



RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900